பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 06 2026 THURSDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவில் உள்ள முதலீட்டுக்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரான்ஸ் நாட்டின் தொழிலதிபர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

2. உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. சென்னை - பெங்களூரு - ஹைதராபாத் வழித்தடங்களில் அதிவிரைவு ரயில்சேவை தொடங்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. Disha எண்ணெய் கப்பல், 62 ஆயிரத்து 370 மெட்ரிக் டன் திரவ எரிவாயுவுடன், நாளை காலை குஜராத் வந்தடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது

5. இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி-பிரேஸிலின் Marcelo Demoliner இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவில் உள்ள முதலீட்டுக்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரான்ஸ் நாட்டின் தொழிலதிபர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பாரிஸ் நகரில் அந்நாட்டின் தொழிலதிபர்களை இன்று சந்தித்து பேசிய அவர், உற்பத்தித் துறை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், கடல்சார் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

முதலீட்டுக்கான நடைமுறைகள் இந்தியாவில் எளிமைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<<

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய உணவுக் கழக நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், அறிவியல் அடிப்படையிலான உணவு சேமிப்பு கிடங்குகளை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நவீன தொழில்நுட்பம் மூலம், உணவு தானிய விநியோகம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் ஏழைகளுக்கான உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 98 புள்ளி ஐந்து சதவீத பயனாளிகளுக்கு ஆதார் அடிப்படையில் அவை வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ஒரே நாடு - ஒரே ரேஷன் அட்டை திட்டம் சிறப்பாக செயல்படுவதன் மூலம் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் பெரிதும் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வெளிப்படைத் தன்மையுடன் உணவு தானிய விநியோகம் செய்யுமாறு திரு. பிரல்ஹாத் ஜோஷி, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா-வை, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. செர்ஜியோ கோர் சந்தித்து பேசினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதுடன், போதைப்பொருள் புழக்கத்திலிருந்து இருநாட்டு மக்களையும் பாதுகாப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு. செர்ஜியோ கோர், தமது வலைதளதப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியா, அமெரிக்காவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கூட்டாக நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக திரு. செர்ஜியோ கோர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய அரசு புதிய ஹஜ் புனித யாத்திரை கொள்கையை வெளியிடவுள்ளதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஹஜ் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சவுதி அரேபிய நாட்டின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம், இந்தியாவுக்கு இரண்டு விருதுகள் வழங்கியிருப்பதாகவும் கூறினார்.

இந்தியாவிலிருந்து ஹஜ் புனித பயணம் மேற்கொண்டவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கியதற்கு சவுதியில் உள்ள இந்திய ஹஜ் புனித யாத்திரை ஆணையத்திற்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

நடப்பு நிதியாண்டில் 26 ஆயிரம் கிராம சாலைகளை அமைக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இந்த சாலை பணிகளுக்காக, 18 ஆயிரத்து 900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆய்வுக் கூட்டம், மத்திய ஊரக வளர்ச்சித்துறை செயலர் திரு. Rohit Kalsal தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

ஆந்திரா, பீகார், சத்திஷ்கட், மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த ஊரக வளர்சித்துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிராமப்புற பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

>>>>>><<<<<<

NEET மறுதேர்வு வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், மாணவர்கள் பதற்றமடையாமல் தேர்வெழுத வேண்டும் என்று தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது.

இந்த முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில். வெளிப்படைத் தன்மையுடனும், பாதுகாப்புடனும் தேர்வு நடத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகள், பல்வேறு அமைச்சகங்கள், பாதுகாப்புத் துறை ஒருங்கிணைந்து இந்த தேர்வுக்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் தேர்வு தொடர்பான வதந்திகளை பரப்ப வேண்டாம் என்றும் மாணவர்களுக்கு தேவையற்ற மனஅழுத்தத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னையிலிருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத் வழித்தடங்களில் அதிவிரைவு ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள நமோ சென்டர் அதிநவீன பயிற்சி மையத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், மும்பை -அஹமதாபாத் இடையேயான புல்லட் ரயில் திட்டம் அடுத்த ஆண்டு பயன்பாட்டுக்கு வரும் என்று கூறினார்.

இந்தியா, உலகில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்து வருவதாக கூறிய அவர், டிஜிட்டல் பரிவர்த்தனைகள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் நாடு சாதனை படைத்து வருவதாக தெரிவித்தார்.

நவீன விமான நிலையங்கள், விரைவுச் சாலைகள், வந்தே பாரத் ரயில்கள் உள்ளிட்டவை நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தற்போது, உலக அளவில் இந்திய திரைப்படங்களுக்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னை, மும்பை, ஹைதராபாத், பெங்களூரு உள்ளிட்ட நகரங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப கலைஞர்கள், ஹாலிவுட் திரைப்படங்களுக்கான தயாரிப்புக்கு பிந்தைய பணிகளை மேற்கொண்டு வருவதாக டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

இந்தியாவிற்கு 62 ஆயிரத்து 370 மெட்ரிக் டன் திரவ எரிவாயுவுடன் Disha எண்ணெய் கப்பல், நாளை காலை குஜராத் மாநிலம், Daheg துறைமுகம் வந்தடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் இயக்குநர் திரு. Opesh Kumar Sharma, மால்டாவிலிருந்து புறப்பட்ட இந்த எண்ணெய்க் கப்பல், கடந்த திங்கட்கிழமை அன்று பாதுகாப்பாக Hormuz நீரிணையை கடந்ததாக தெரிவித்தார்.

போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டுள்ள வளைகுடா நாடுகளிலிருந்து மூவாயிரத்து 639 இந்திய மாலுமிகள் இதுவரை பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்காசியா மற்றும் வளைகுடா நாடுகளில் தங்கியுள்ள இந்திய மாலுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் திரு. Opesh Kumar Sharma தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாட்டில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முழுஅளவில் செயல்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

கடந்த 3 நாட்களில் ஒரு கோடியே 47 லட்சம் வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

22 ஆயிரத்து 900 டன் வர்த்தக பயன்பாட்டிற்கான எரிவாயு விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை 99 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழாய் வழி எரிவாயு இணைப்பு பெற்றவர்கள், தங்களின் எரிவாயு சிலிண்டர் இணைப்பை திரும்ப ஒப்படைத்துள்ளதாகவும் திருமதி. சுஜாதா சர்மா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களுக்கு, நடப்பு நிதியாண்டில் 8 புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் வட்டி நிர்ணயம் செய்ய மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

வைப்பு நிதி அறங்காவலர் குழுக் கூட்டம் தெரிவித்த பரிந்துரையை ஏற்று, இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டித்தொகை, இம்மாத இறுதியில் வைப்புநிதி சந்தாதார்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்கு, நேட்டோ உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Pete Hegseth கேட்டுக் கொண்டுள்ளார்.

நேட்டோ பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், நேட்டோ அமைப்பின் ராணுவ திறனை வலுப்படுத்த உறுப்பு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமெரிக்கா, ராணுவ மேம்பாட்டிற்காக ஒன்று புள்ளி ஐந்து டிரில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளதாக திரு. *Pete Hegseth* தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி-பிரேஸிலின் *Marcelo Demoliner* இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை *7-6, 7-6* என்ற செட்கணக்கில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஜப்பானின் *Takeru Yuzuki* இணையை வென்றது.

>>>>>><<<<<<

***Ljubljana*** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரணவ் செந்தில்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி மலேசியாவில் இன்று தொடங்கியது.

இந்தியா, பாகிஸ்தான் உட்பட **9** நாடுகளைச் சேர்ந்த **69** பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியாவின் சார்பில் அபய் சிங், வேலவன் செந்தில் குமார் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

>>>>>>END<<<<<<